## வின்மீன் நடப்பு நிகழ்வுகள்

1] சி.பி.ஐ (CBI – Central Bureau of Investigation) – யின் புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள ரிஷிகுமார் சுக்லா எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?

[A] ராஜஸ்தான்

[B] மத்திய பிரதேசம்

[C] உத்தர பிரதேசம்

[D] ஜார்கண்ட்

- ✓ 1983 ஆம் வருட மத்திய பிரதேச பணிநிலை பேட்ஜ் ஐபிஸ் அதிகாரியான ரிஷிகுமார் சுக்லா, சிபிஐ-யின் புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ இப்பணியில் இரண்டு ஆண்டுகள் இவர் நீடிப்பார். பிரதமரால் நியமிக்கப்பட்ட உயர்மட்ட கமிட்டியினால் சுக்லா நியமிக்கப்பட்டுள்ளார். இடைக்கால தலைவரான எம்.நாகேவர ராவிற்கு பிறகு சுக்லா நியமிக்கப்பட்டுள்ளார்.
- ✓ லஞ்ச புகாரில் சிக்கிய சிபிஐ-யின் சிறப்பு இயக்குநரால் லஞ்ச புகார் சுமத்தப்பட்ட அலோக் குமார் வெளியேறியதால்,ஜனவரி 10, 2019 ஆம் தேதியிலிருந்து சிபிஐ தலைவர் பதவி காலியாக இருந்தது.
- ✓ சிபிஐ இயக்குநராக நியமிப்பதற்கு முன் சுக்லா,2016-ல் மத்திய பிரதேசத்தின் டிஜிபி-யாக இருந்தார் மற்றும் போபாலில் உள்ள மத்திய பிரதேஷ் காவலர் குடியிருப்பு கழகத்தின் தலைவராகவும் இருந்தார்.

2] இந்தியாவுக்கான நேபாள தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

[A] நிலம்பர் ஆச்சாரியா

[B] தீப் குமார் உபத்யா

[C] அர்ஜீன் கார்கி

[D] சங்கர் பிரசாத் சர்மா

- ✓ நேபாளின் முன்னாள் சட்ட அமைச்சரான நிலம்பர் ஆச்சாரியா , இந்தியாவுக்கான வெளிநாட்டு தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்,அரசியலில் இணைவதற்காக

தீப் குமார் உபத்யா ராஜினாமா செய்தபின் ஒரு வருடத்திற்கும் மேலாக இப்பதவி காலியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

- ✓ சீட்டல் நிவாஸில் உள்ள ராஷ்டிரபதி பவனில் ஆச்சாரியாவிற்கு குடியரசு தலைவர் பித்யா தேவி பந்தாரி பதவி பிரமாணம் செய்து வைத்தார். குடியரசு தலைவரிடம் இருந்து உறுதிமொழி மற்றும் ரகசிய வாக்குமூலம் பெறும் முதல் நபர் ஆச்சாரியா ஆவார். இதற்கு முன் தூதுவர்கள் உச்சநீதிமன்ற நீதிபதியிடம் இருந்து உறுதிமொழி மற்றும் வாக்குமூலம் பெற்றனர்.

3] 2018 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான கே.வீரமணி விருதினை பெற்றவர் யார்?

[A] பி எஸ் கிருஷ்ணன்

[B] நிதிஷ் குமார்

[C] எஸ்.டி.மூர்த்தி

[D] வீரா முனுசம்

- ✓ 65 ஆண்டுகளுக்கும் மேலாக எஸ்சி, எஸ்டி, பிசி பிரிவினர்க்கான சமூக நீதிக்காக ஆற்றிய சேவைக்காக, முன்னாள் கோவா அரசாங்க செயலர் பி.எஸ்.கிருஷ்ணன், 2018 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான கே.வீரமணி விருதினை பெற்றுள்ளார். சிகாகோவை தலைமையிடமாக கொண்ட தன்னார்வ தொண்டர்கள் நிறுவனமான, பெரியார் சர்வதேச நிறுவனம், டில்லியில் நடைபெற்ற விழாவில் சமூக நீதிக்கான சிறந்த பங்களிப்பிற்கான விருதினை வழங்கியுள்ளது. இவ்விருது ஓர் உலோக தகட்டையும், ஒரு இலட்சம் ரொக்கத்தையும் கொண்டது.

4] ஆஸ்திரேலியாவின் இலக்கியத்திற்கான உயரிய விருதினை பெற்ற பெகரூஸ் போசனி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

[A] பாலஸ்தீன்

[B] சவுதி அரேபியா

[C] இரான்

[D] ஓமன்

- ✓ ஈரானிய பத்திரிக்கையாளர், திரைப்பட இயக்குநர் மற்றும் காவலில் வைக்கப்பட்ட அகதியான பெகரூஸ் போசானி, இணையவழி செய்தி பரிமாற்றியான “வாட்சப்” மூலம் எழுதப்பட்டதாக சொல்லப்படும் ஒரு புத்தகத்திற்காக இலக்கியத்திற்கான விக்டோரியன் பரிசினைப் பெற்றுள்ளார். “நோ ஃப்ரண்ட் பட் தி மவுண்டெய்ன்ஸ் : ரைட்டிங் ஃப்ரம் மானுஸ் பிரிஸன்” புத்தகத்திற்காக ஆஸ்திரேலியன் டாலர் 1,00,000 வென்றுள்ளார். கதையல்லாத பிரிவின் கீழும் இப்புத்தகம் வென்றுள்ளதால், இன்னும் கூடுதலாக, ஆஸ்திரேலியன் டாலர் 25,000 பெறுவார்.
- ✓ இவ்விருதானது இப்புத்தகத்தின் மொழிப்பெயர்ப்பாளரான ஒமிட் டொஃபிஹியனால் பெற்று கொள்ளப்பட்டது. ஒமிட் டொஃபிஹியன், போசானியின் கதைகளுக்கு உயிரோட்டமளிப்பதில் போசானியுடன் 5 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றியவர் ஆவார். இது ஆஸ்திரேலியாவின் மிக சிறந்த இலக்கிய பரிசாகும். முறையான விசா இல்லாமல், மைய்ன்லேண்ட் ஆஸ்திரேலியாவிற்குள் நுழைய முற்பட்டதற்காக, ஆஸ்திரேலியன் புகலிட சட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டிலிருந்து பப்புவா நியூ கினியாவின் மானுஸ் தீவில் ஈரானிய தஞ்சம் தேடுபவரான போசானி கைது செய்து வைக்கப்பட்டுள்ளார்.
- ✓ 2017 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா, “ரீஜினல் ஃப்ராசசிங் சென்டர்”-ஐ மூடியபோதிலும், போசானி தீவில் கூடாரத்தில் வைக்கப்பட்டுள்ள 600 அகதிகளில் ஒருவராவார். ஆஸ்திரேலியாவின் கடுமையான குடியேற்ற கொள்கைப்படி, பசிபிக்கில் உள்ள மானுஸ் தீவு அல்லது நவ்ரூ – விற்கு படகின் மூலம் நாட்டிற்குள் நுழைய முயலும் தஞ்சம் தேடுபவர்கள், அகதிகளாக அறிவிக்கப்பட்டு, ஆஸ்திரேலியாவில் மீண்டும் குடியேற தடை விதிக்கப்படுவார்கள்.
- ✓ நம்ப தகாத கடல் பயணங்கள் மூலம் மக்கள் உள்நுழைவதைத் தடுப்பதே ஹர்ஷ் பாலிசி ஆகும். ஆனால் அமெரிக்கா மற்றும் பிற உரிமைகள் குழுமங்கள், இக்கூடாரங்களின் நிபந்தனைகள் மற்றும் நீண்டகால தடுப்புகாவல் போன்றவற்றை விமர்சித்துள்ளது.

5] 100 டி20 ஆட்டங்கள் விளையாடிய முதல் ஆசிய பெண் கிரிக்கெட் வீராங்கனை யார்?

[A] சானா மிர்

[B] பிஸ்மா மரோ

[C] ஹர்மன்பிரீத் கவுர்

[D] தேந்திரா தோட்டின்



winmeen.com

பாகிஸ்தானின் முன்னாள் கேப்டனான சானா மிர் , 100 சர்வதேச டி20 ஆட்டங்கள் விளையாடிய முதல் ஆசிய பெண் கிரிக்கெட் வீராங்கனை என்ற சிறப்பை பெற்றுள்ளார். பிப்ரவரி 3, 2019 ஆம் தேதி கராச்சியில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக நடைபெற்ற மூன்றாவது டி20 தொடரில் பங்கேற்றபோது இச்சிறப்பை எய்தினார்.

ஒட்டுமொத்தமாக, மிர், 100 டி20 ஆட்டங்கள் விளையாடியோர்களில் ஆறாவது பெண் ஆவார். மேற்கிந்திய தீவுகளின் தேந்திரா தோட்டின், 109 டி20 ஆட்டங்கள் விளையாடி முதலிடத்தில் உள்ளார். ஆசிய பட்டியலில், சானாவிற்கு அடுத்தப்படியாக, பாகிஸ்தான் கிரிக்கெட் வீராங்கனை பிஸ்மா மரோ ( 94 டி20 ஆட்டங்கள் ) மற்றும் இந்தியாவின் ஹர்மன்பிரீத் கவுர் மூன்றாம் இடத்திலும் உள்ளார். (93 டி20 ஆட்டங்கள் )

6] சிந்து நதி டால்பினை மாநில நீர்வாழ் விலங்காக அறிவித்த மாநிலம் எது?

[A] ஹரியானா

[B] ஹிமாச்சல் பிரதேசம்

[C] பஞ்சாப்

[D] ஜம்மு & காஷ்மீர்

- ✓ பஞ்சாப் மாநிலம், அழிந்து வரும் நிலையில் உள்ள சிந்து நதி டால்பினை, மாநில நீர்வாழ் விலங்காக அறிவித்துள்ளது. முதலமைச்சர் கேப்டன் அமரிந்தர் சிங் தலைமையின் கீழ் நடந்த வன உயிரின மாநில மன்றத்தின் சந்திப்பில் இம்முடிவு எடுக்கப்பட்டது.
- ✓ சிந்து டால்பின் என்பது இந்தியா மற்றும் பாகிஸ்தானில் உள்ள பியாஸ் ஆற்றில் மட்டுமே காணப்படக்கூடிய நன்னீரில் வாழும் நீர்வாழ் பாலூட்டியாகும். சாம்பல்/பழுப்பு நிறத்தில் காணப்படும் இவற்றிற்கு கண் தெரியாது மேலும் குறைந்தபட்சம் 30 ஆண்டுகள் உயிர் வாழக்கூடியது.
- ✓ ஸ்ரீ குருநானக் தேவ்ஜியின் 550 வது பர்காஸ் பர்ப்-யினை குறிக்கும் விதமாக கஞ்சில் ஈரநிலம் மற்றும் புனித காளி பெய்ன் ஆறினை வன உயிரின பாதுகாப்பு பகுதியாக முதலமைச்சர் அறிவித்துள்ளார். இவ்வாறில் மூழ்கி எழும்போது முக்தி பெற்றதால், காளி பெய்ன் ஆறானது ஸ்ரீ குருநானக் தேவ்ஜியுடன் தொடர்புடையதாகிறது.

7] பாசுபு - கும்குமா திட்டத்தின் 2 ஆம் கட்டத்தை ஆரம்பித்துள்ள மாநில அரசாங்கம் எது?

winmeen.com

[A] மேற்கு வங்கம்

[B] தெலங்கானா

[C] ஒடிசா

[D] ஆந்திர பிரதேசம்

- ✓ பிப்ரவரி 2 ஆம் தேதி, ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, பசுபு-கும்குமா (மஞ்சள்-குங்குமம்) திட்டத்தின் இரண்டாம் கட்டம் மற்றும் நல்வாழ்வு ஓய்வூதியம் தொடங்கினார். இத்திட்டத்தின் கீழ், DWCRA (Development of Women and Children in Rural Areas) வில் உள்ள மகளிருக்கு ரூ. 10,000 மூன்று தவணைகளாக வழங்கப்படும் என்றும் இதற்காக ரூ.9,400 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ மூத்த குடிமக்கள், விதவைகள், கைத்தறி வேலை செய்பவர்கள், கள்ளு இறக்குபவர்கள், மீனவர்கள், கல்யாணமாகாத பெண்கள், டப்பு கலைஞர்கள், செருப்பு தைப்பவர்கள் மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளுக்கான நல்வாழ்வு ஓய்வூதியம் ரூபாய் ஆயிரத்திலிருந்து இரண்டாயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது, திவ்யாங்ஸ் மற்றும் இயூன்ச்ஸீக்கான ஒய்வூதிய தொகை ரூபாய் 1500-யிலிருந்து ரூபாய் 3000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டோர்க்கான ஒய்வூதியம் 3500 ஆக வழங்கப்படும்.

7] உலக புற்றுநோய் தினம் 2019-ற்கான கருப்பொருள் என்ன?

[A] நமக்கு பிறகு இல்லை - Not Beyond Us

[B] பழங்கதைகளை ஒழித்துக்கட்டு - Debunk the Myths

[C] நான் இருக்கிறேன் மற்றும் நான் இருப்பேன் - I Am and I Will

[D] புற்றுநோய் கட்டுக்கதைகள் – உண்மையை பெறுங்கள் - Cancer Myths – Get the Facts

- ✓ ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 4 ஆம் தேதி, 'உலக புற்றுநோய் தினம்" ஆக புற்றுநோய் பற்றின விழிப்புணர்வு, அதன் சிகிச்சை முறைகள் மற்றும் தடுப்பதற்கான முறைகளை ஊக்குவிக்கவும் பரப்பவும் கொண்டாடப்படுகிறது.
- ✓ மரணத்தை ஏற்படுத்தக்கூடிய நோய்களுக்கு எதிராக, அரசாங்கங்கள், தனி மனிதர்கள் நடவடிக்கை எடுக்க அழுத்தம் கொடுப்பதன் மூலம் கல்வி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இறப்பை தடுத்து

பல லட்ச உயிர்களை காப்பதே இந்நாளின் முக்கிய நோக்கமாகும். உலக புற்றுநோய் தினத்தை நடத்தும் சர்வதேச புற்றுநோய் கட்டுபாட்டிற்கான கூட்டமைப்பானது, புதிதாக மூன்று வருட பிரசாரத்தை “நான் இருக்கிறேன் மற்றும் நான் இருப்பேன்” என்ற தீமுடன் அறிமுகப்படுத்தியுள்ளது.

- ✓ தனிப்பட்டோரின் அர்ப்பணிப்பினை அதிகப்படுத்துதலுக்கான செயல்பாடினை வலுப்படுத்துவதே இப்பிரசாரமாகும்.எதிர்காலத்தில் நல்ல பலன்களை தரக்கூடிய தனிப்பட்டோரின் முயற்சிகளில் உள்ள சக்தியினை இப்பிரசாரம் குறிக்கிறது.ஒவ்வொரு வருடமும் 9.6 மில்லியன் மக்களுக்கும் அதிகமாக புற்றுநோயால் இறக்கின்றனர். இது எய்ட்ஸ், மலேரியா மற்றும் காசநோயால் இறப்பவர்களை விட அதிகமாகும்.
- ✓ இந்தியாவில் 2.25 மில்லியன் மக்கள் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர், ஆண்டுதோறும் ஒரு லட்சம் புதிய நோயாளிகள் உருவாகின்றனர்.2018-ல் ஏறத்தாழ 7 இலட்சம் பேர் இந்நோயால் இறந்துள்ளனர். இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில் 2020 ஆம் ஆண்டுக்குள் 17 இலட்சம் புதிய நோயாளிகள் உருவாகலாம் என்றும் 8 இலட்சம் இறப்புகள் ஏற்படலாம் என்றும் கூறப்படுகிறது.

9] சமீபத்தில் சுட்டு கொல்லப்பட்ட புகழ்பெற்ற நாவலாசிரியரான அலா மாஸ்செளப் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ?

[A] ஈராக்

[B] ஆப்கானிஸ்தான்

[C] பாகிஸ்தான்

[D] பங்களாதேஷ்

- ✓ ஈராக்கின் கர்பலா நகரத்தில் பிப்ரவரி 2 ஆம் தேதி அடையாளம் தெரியாத பகைவர்களால் அலா மாஸ்செளப் சுட்டு வீழ்த்தப்பட்டார். இவர் அரசியல் மற்றும் மத ரீதியான தடைகளை தன் எழுத்துகள் மூலம் தகர்த்த துணிச்சலான எழுத்தாளர் ஆவார்.
- ✓ தனது சொந்த நகரத்தை பற்றி அவர் ஆராய்ந்து வெளியிட்ட ஆய்வறிக்கை இரண்டு பாகங்களாக “கர்பலா கலாச்சார வரலாற்றின் சுருக்கம் (A Summary of Karbala Cultural History)” வெளிவந்தது. மசெளப், பிரிவினைவாதம் மற்றும் போராளிகளுக்கு எதிராக பேசியுள்ளார். வெளிப்படையான எழுத்தாளரான இவர், பலவித செய்தித்தாள்களில் எழுதியுள்ளார் மற்றும் நாட்டின் கலகங்கள் (Chaos

of the Nation (2014)), முகநூல் மீதான குற்றம் (Crime on Facebook (2015), யூத குளியல்கள் The Jewish Baths (2017) உட்பட சில நாவல்கள் எழுதியுள்ளார்.

- ✓ மசெளப் ஆனவர் 20 புத்தகங்களை வெளியிட்டுள்ளார் மற்றும் கர்பலாவின் வரலாறு மற்றும் கலாச்சாரம் பற்றி எழுதியுள்ளார்.மேலும் ஒரு காலத்தில் ஈராக்கில் இருந்த சிறுபான்மை யூதர்கள் பற்றியும் எழுதியுள்ளார். அராபி கதைக்கான 'கட்டாரா' பரிசு , "கதவுகள் மற்றும் ஜன்னல்கள்"-க்கான ஆவணப்படத்திற்கான பரிசு முதலான பற்பல பட உருவாக்கம், எழுத்துக்கான பரிசுகளை வென்றுள்ளார்.
- ✓ சமீபகாலமாக, ஈராக் பல அரசியல் படுகொலைகளைக் கண்டு வருகிறது. குறிப்பாக வெளிப்படையான ஆர்வலர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். கர்பலா, பாக்தாத்திலிருந்து 100 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள நகரமாகும்.

10] உலக பாரம்பரிய நிலையம் (WHC – World Heritage Centre) பின்வரும் எந்த மாநிலத்தில் நிறுவப்பட உள்ளது ?

[A] சென்னை

[B] டேராடூன்

[C] புது டெல்லி

[D] கொல்கத்தா

- ✓ 45 நாடுகளின் ஆன்மீக கூடாரங்கள் கொண்ட உலக பாரம்பரிய நிலையம், கொல்கத்தாவில் உள்ள நாடியா மாவட்டத்தில் மயாபூரில் அமைக்கப்படவுள்ளது. ஒவ்வொரு நாட்டின் கூடாரமும் , அந்நாட்டின் கலாசாரம், உடை, வாழ்க்கை முறை, உணவு மற்றும் சுற்றுப்புறத்தை பிரதிபலிப்பதாக இருக்கும்.
- ✓ நாடியா மாவட்டத்தில் சமீபத்தில் நடந்த சந்திப்பில் இச்செயல்முறை குறித்து மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி ஆய்வுக்கு பிறகு, இம்மையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.
- ✓ முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் முன்னெடுக்கப்பட்ட இத்திட்டத்தில் பெங்காலி கைத்தறி மற்றும் கைவினை பொருட்கள் காட்சிப்படுத்தப்படும்.
- ✓ இம்மையத்திற்கான திட்டமிடப்பட்ட திட்ட செலவு ரூ. 3,000 கோடி ஆகும். மயாப்பூர், இஸ்கானின் (ISKON – International Society for Krishna Consciousness) சர்வதேச தலைமையிடமாகும்.